விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 296 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 24 வியாழக்கிழமை (10.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ரத்தன் டாட்டா காலமானார்



பிரபல தொழிலதிபர் ரத்தன் டாட்டா தனது 86ஆவது வயதில் மும்பையில் நேற்றுக் காலமானார்.

## தமிழ் மக்கள் கூட்டணியின் இளையோர் அணி வேட்புமனு
### மான் சின்னத்தில் போட்டி

(யாழ்ப்பாணம்)
நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட விருக்கும் வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் நேற்றுப் புதன் கிழமை மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இந்தப் பட்டியலில் யாழ். மாநகர சபை முன்னாள் மேயர் வி.மணிவண்ணன், தவச் செல்வம் சிற்பரன் (கட்டடக் கலைஞர், 15

## சுன்னாகத்தில் ரயில் மோதி ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் பகுதியில் புகையிரதத்தில் மோதுண்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

குருக்கள்கிணற்றடி வீதி, அளவெட்டி 02

## பொறுப்புக்கூறல் திட்டத்தை தொடர்வதற்குத் தீர்மானம்
### இலங்கை தொடர்பில் அமெரிக்கா



(ஜெனிவா)
ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பான பொறுப்புக்கூறல் திட்டத்தினைத் தொடர்வதற்குத் தீர்மானித்துள்ளது என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கான அமெரிக்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மிச்செலே டெய்லர் 02

## இலங்கைக்கு எதிரான தீர்மானம்
# வாக்கெடுப்பின்றி
# ஐ.நாவில் நிறைவேற்றம்

(ஜெனிவா) இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான வரைவு தீர்மானம் வாக்கெடுப்பின்றி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)



## திணிப்பதை ஏற்க முடியாது
### ஐ.நா தீர்மானத்தை நிராகரித்த இலங்கை

(கொழும்பு)
எந்தவொரு இறையாண்மையுள்ள அரசாலும் அதன் அரசமைப்பிற்கு முரணான மற்றும் அதன் உள்நாட்டு சட்ட செயன்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் வெளிப்புறப் பொறிமுறையை கட்டாயமாகத் திணிக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது 02

## ஒன்லைன் ஊடாக நிதி மோசடிகள்
### பயனாளர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
இலங்கையில் ஒன்லைன் ஊடாக மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்து வருவதாகக் கணினி அவசரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான 15

## மன்னார் மனித புதைகுழி
### ஸ்கேன் செயற்பாடு ஆரம்பம்

(மன்னார்)
நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மன்னார் சதொச மனித புதைகுழி அகழ்வுப் பணி இவ்வாரம் மீண்டும் இடம்பெறவுள்ள நிலையில் தடயப் பொருட்களை பிரித்தெடுத்தல், புதைகுழியை சூழவுள்ள பகுதியை ஸ்கேன் செய்தல், அகழ்வு செய்யும் பணிகள் முதற்கட்டமாக இடம்பெற்று வருகின்றது.

இருப்பினும் குறித்த அகழ்வுப் பணி தொடர்பான செயற்பாடுகளையோ, ஸ்கேன் செயற்பாடுகளையோ புகைப்படம் எடுக்க, காணொளி யாகப்பதிவுசெய்யவோ 15

## திருகோணமலை மாவட்டத்தில்
### தமிழரசுக் கட்சி ஏனைய கட்சிகளோடு இணைந்து வீட்டுச் சின்னத்தில் போட்டி

(கிளிநொச்சி)
திருகோணமலை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏனைய கட்சிகளோடு சேர்ந்து தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வேட்புமனு நியமனக் குழுவின் நேற்றைய வவுனியாக் கூட்டம் தொடர்பாக கிளிநொச்சியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு 15



## ஊழலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முயற்சிக்கு ஆதரவளிக்கப்படும்
### ஜனாதிபதி அநுர குமாரவிடம் சுவிட்சர்லாந்து தூதுவர்

(கொழும்பு)
ஊழலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அரசின் முயற்சிக்கு ஆதரவளிக்கப்படும் என ஜனாதிபதி அநுரவிடம் சுவிட்சர்லாந்து தூதுவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் 02



## 21 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(யாழ்ப்பாணம்)
நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்ட 21 இந்திய மீனவர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் பயணித்த 4 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைதான 21 இந்திய மீனவர்களும் மருத்துவப் பரிசோதனைகளின் பின்னர் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் துறை திணைக்கள 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அதிபர்களுக்கான கூட்டங்களை வாணிவிழாவின்போது தவிருங்கள்

## ஆளுநருக்கு சிவசேனை கடிதம்

(யாழ்ப்பாணம்)

சரஸ்வதி பூஜை மற்றும் விஜயதசமி நாட்களில் அதிபர், ஆசிரியர்களுக்கான கூட்டங்களைத் தவிர்த்து பாடசாலைகளில் வாணிவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு ஆவன செய்யுமாறு சிவசேனை அமைப்பு வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக்கடிதத்தில் பாடசாலைகளில் நடைபெறுகின்ற வாணி விழாக்களின் போது மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறுவதால் அன்றைய நாட்களில் அதிபர்கள் பாடசாலைகளில் பிரசன்னமாக இருந்து விழாவை சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-7)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராயில் 16 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்**

- 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட 20 அடிப் பாதையுடன்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற்வீதி 250m தூரம்
- நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்ல சூழல்
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 - மாலை 6.00 வரை

(2267)

**077 288 0152, 076 739 0413**


## ரயில்...

பகுதியைச் சேர்ந்த கந்தையா இலங்கேஷ்வரன் (வயது 58) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று மாலை, சுன்னாகம் - மயிலணி பகுதியில் உள்ள தாயார் வீட்டுக்கு நடந்து சென்ற போது, சுன்னாகம் பகுதியில் தண்டவாளத்தை கடக்க முற்பட்ட வேளை தொடருந்து மோதியதில் ஸ்தலத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த நபரின் ஒரு பிள்ளை கனடாவிலும், மற்றைய பிள்ளை இந்தியாவிலும் வசித்து வருகின்றனர்.

அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

# சட்டத்தரணி கமலரூபன்

## தலைமையிலான சுயேட்சைக் குழு யாழில் வேட்பு மனுத்தாக்கல்



எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சட்டத்தரணி நாகரத்தினம் கமலரூபன் தலைமையிலான குழுவினர் சுயேட்சையாக போட்டியிட வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் சுயேட்சை குழுவினரால் நேற்று நண்பகல் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. (ம-7)

## பொறுப்பு...

தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் முக்கிய பணிகளையும் இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பான பொறுப்புக்கூறல் திட்டம் மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் ஊழல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான திட்டங்களையும் தொடர்வதற்கு தீர்மானித்தது.

இந்த முக்கியமான விவகாரங்கள் குறித்து தொடர்ந்தும் ஈடுபாட்டை பேணுவதற்கு அமெரிக்கா எதிர்பார்த்துள்ளது என்று பதிவிட்டுள்ளார். (ம-7)


## கடை வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி அண்மித்த பகுதிகளில் பிரதான வீதியில் உள்ள கடையொன்று வாடகைக்கு தேவை.

(2255)

**077 919 1529**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் வீடொன்று வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு :

(2255)

**077 919 1529**


## ஐ.நா...

என இலங்கை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்த அறிக்கையில் இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, குறிப்பிட்ட தீர்மானத்தின்[57/L.1] நகல்வடிவம் ஐக்கிய நாடுகள் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆணையை மேலும் நீடிக்கின்றது.

மனித உரிமை ஆணைக்குழுவின் தீர்மானத்தையும் 51/1 அதற்கு முந்தைய தீர்மானத்தையும் 46/1 இலங்கை நிராகரித்துள்ளது. இந்த தீர்மானத்தின் மூலமே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்குள் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறை ஏற்படுத்தப்பட்டது.

நாங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையிலிருந்து எங்களை விலக்கிக்கொள்கின்றோம்- அதற்கான காரணங்களை ஏற்கனவே சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளோம்.

தொடர்புபட்ட நாடு என்ற அடிப்படையில் இலங்கையின் சம்மதம் இன்றியே 51/1 தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது.வாக்கெடுப்பின் போது உலக நாடுகள் அந்ததீர்மானம் குறித்து பிளவுபட்டிருப்பது வெளிப்பட்டது.

இதன் காரணமாக அந்த 51/1 தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆணையை மேலும் நீடிக்கும் தீர்மானம் மனித உரிமை பேரவையின் பொது உடன்பாடு அற்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்குள் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை ஏற்படுத்துவது முன்னர் ஒரு போதும் இடம்பெறாத விடயம்.

எந்தவொரு இறையாண்மையுள்ள அரசாலும் அதன் அரசமைப்பிற்கு முரணான மற்றும் அதன் உள்நாட்டு சட்ட செயல்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் வெளிப்புற பொறிமுறையை கட்டாயமாக திணிக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (ம-7)

## ஊழலுக்கு...

கலாநிதி சிறி வோல்ட் நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு வாழ்த்துத் தெரிவித்த தூதுவர் கலாநிதி சிறி வோல்ட், சுவிட்சர்லாந்து அரசாங்கம் மற்றும் அந்நாட்டு மக்களின் வாழ்த்துக்களையும் ஜனாதிபதிக்குத் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது செயற்படும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தின் ஊடாக சுவிட்சர்லாந்து இலங்கைக்கு ஆதரவளிக்க உறுதி பூண்டுள்ளதாக உறுதிப்படுத்திய தூதுவர், ஊழலுக்கு எதிரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் முயற்சிகளுக்கு சுவிட்சர்லாந்து ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாத் துறையில் சுவிட்சர்லாந்தின் நிபுணத்துவத்தையும் இதன்போது எடுத்துரைத்த அவர், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் அந்த துறைகளில் இலங்கைக்கு ஆதரவை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-7)


## மரண அறிவித்தல்

மலர்வு 14 - 09 - 1963



உதிர்வு 08 - 10 - 2024

### சற்குணானந்தஸ்ரீஸ்கந்தராசா மீராதேவி

(போட்டோ ஸ்ரீ உரிமையாளர்)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் வீதி கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணானந்தஸ்ரீஸ்கந்தராசா மீராதேவி 08.10.2024 செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரத்தினம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகராஜா - பத்மாவதி தம்பதியியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சற்குணானந்தஸ்ரீஸ்கந்தராசா (போட்டோ ஸ்ரீ) அவர்களின் பாசமிகு மனைவியும் கிருஷோப்தமா (சுவிஸ்), வக்ஷலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், லங்காதேவி, ரதிதேவி, கெங்காதேவி, முருகமூர்த்தி,மேனகாதேவி (ஜேர்மன்) காலஞ்சென்ற காஞ்சனாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் றெஜேபி (சுவிஸ்), கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமியும் அஷ்வதா, ஹரிஷ், அகர்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.10.2024 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல் :
[illegible]
076 638 9923

(2257)



## DISTRICT SECRETARIAT, JAFFNA INVITATION FOR BIDS - (IFB-05)

Department Procurement Committee of Jaffna District Secretariat called bids by **IFB 05 for Procurement of Goods.** Please see the above mentioned Invitation for Bids (IFB-05) in **Daily News, Thinakaran & Dinamina dated 09.10.2024** or on Jaffna District Secretariat **website www.jaffna.dist.gov.lk**

**Chairman,**
**Department Procurement Committee,**
**District Secretariat, Jaffna**

(C-1367)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடு பிடிக்கும் தேர்தல் களம்!

# கட்டுப்பணம் செலுத்திய 246 சுயேட்சைக் குழுக்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

**2024 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக மொத்தம் 246 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இந்த சுயேட்சை குழுக்கள் செப்ரெம்பர் 25 மற்றும் ஒக்டோபர் 8 இற்கு இடையில் தங்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன.

இதன்படி மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திகாமடுல்ல, திருகோணமலை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் அதிகளவு குழுக்கள் வைப்புகளை செய்துள்ளன.

இதுவரை மொத்தம் 17 அரசியல் கட்சிகளும் 16 சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் ஆணையத்திடம் தமது வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.

இந்நிலையில் நாளை 11ஆம் திகதியன்று வேட்பு மனு தாக்கல் நடவடிக்கைகள் நிறைவுக்கு வருகின்றன.

அத்துடன் நவம்பர் 14 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஒன்லைன் மோசடி 20 சீனர்கள் கைது

(கொழும்பு)

ஒன்லைன் நிதி மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சந்தேகத்தின் பேரில் மேலும் 20 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் அதிகாரிகளினால் சந்தேகநபர்கள் பாணந்துறையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 5 மடிக்கணனிகள், 437 கையடக்கத் தொலைபேசிகள், 332 யுஎஸ்பி கேபிள்கள், 17 ரவுட்டர்கள் மற்றும் ஏனைய உபகரணங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 30 சீன பிரஜைகள், 4 இந்திய பிரஜைகள் மற்றும் 6 தாய்லாந்து பிரஜைகள் உட்பட 40 வெளிநாட்டு பிரஜைகள் ஹன்வெல்லவில் இரண்டு இடங்களில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அரசியல் வாழ்க்கைக்கு ஓய்வு கொடுக்கும் கிரியெல்ல

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தனது 36 ஆண்டுகால பாராளுமன்ற வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

அந்த வகையில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என அவர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே அலி சப்ரி, பந்துல குணவர்த்தன, காமினி லொக்குகே போன்றோரும் பாராளுமன்ற வாழ்க்கைக்கு ஓய்வை அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கிரியெல்ல பல தசாப்தகால அரசியல் சேவையின் பின்னர் ஓய்வெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (நி)

## முட்டை விலை மேலும் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

அண்மையில் முட்டை ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்ட போதிலும் நாடளாவிய ரீதியில் பல இடங்களில் அந்த விலையில் முட்டைகளைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

20 முதல் 30 ரூபா வரை குறைந்திருந்த முட்டை ஒன்றின் விலை மீண்டும் 40 ரூபாவிற்கு மேல் உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


நாட்டின் சில பகுதிகளில் முட்டையின் விலை கிட்டத்தட்ட 50 ரூபாய்வரை உயர்ந்துள்ளது.

உற்பத்தி குறைந்துள்ளதால் முட்டை விலை அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் தற்போதைய நிலவரத்தால் முட்டையின் விலை அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முட்டையின் விலை அதிகரிப்புக்கு பல காரணிகள் உள்ளதாகவும் குறிப்பாக பெரும்பாலான மொத்த வியாபாரிகள் அதிகளவில் முட்டைகளை கொள்வனவு செய்து அதனை விற்பனை செய்தமையினால் சந்தையில் முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார். (நி)

## மீண்டும் சிறை செல்லும் ஞானசார தேரர்



(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பிடியாணை பிறப்பிக்குமாறு கோட்டை நீதவான் திருமதி தனுஜா லக்மாலி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள நிப்போன் ஹோட்டலில் தேசிய பலசேனா அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் குர்ஆனை அவமதித்த வழக்கு தொடர்பான விசாரணையின் போது, அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

மேலும் இது குறித்த விசாரணையானது அடுத்த வருடம் மார்ச் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஐக்கிய ஜனநாயகக் குரல் மக்கள் மயப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

ஐக்கிய ஜனநாயகக் குரல் என்று புதிய கட்சி கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

"ஐக்கிய ஜனநாயக குரல்" எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுக் காலை கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் இடம்பெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் தலைமையில் இந்த புதிய கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய கட்சியின் சின்னமாக ஒலிவாங்கி அறிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை இந்த ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய ஜனநாயகக் குரல் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இந்திய மீனவர்கள் மீதான அடக்குமுறை இலங்கை தூதரகம் முற்றுகை




(சென்னை)


தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் அடக்குமுறையைக் கண்டித்து, சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் பாமக சார்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வங்கக்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் அத்துமீறி கைது செய்யப்படுவதோடு ஆண்டுக்கணக்கில் சிறை தண்டனை, கோடிக் கணக்கில் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. இவற்றைக் கண்டித்து பாமக சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் இருந்து பேரணியாகச் சென்று இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஆட்ட நிர்ணய சதி
### உபுல் தரங்கவிற்கு பிடியாணை





கடந்த மார்ச் மாதம் பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற 'லெஜண்ட் கிண்ண கிரிக்கெட் தொடரின் போது, ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றதாக உபுல்தரங்க, விளையாட்டு குற்றங்களைத் தடுக்கும் விசேட விசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடளித்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று முன்தினம் மாத்தளை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எனினும், குறித்த வழக்கு விசாரணை இடம்பெறும் நிலையில் அவர் நீதிமன்றத்துக்கு அறியப்படுத்தாமல் அமெரிக்க தேசிய லீக் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுவதற்காக வெளிநாடு சென்றுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிய வந்தது. இந்தநிலையில், நாடு திரும்பும் போது அவரை கட்டுநாயக்க விமான நிலையத்திலேயே கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மாத்தளை மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவின் தலைவர் உபுல் தரங்கவை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மாத்தளை மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

## டெண்டுல்கரின் சாதனையை நெருங்கி வரும் ஜோ ரூட்





இங்கிலாந்து கிரிக்கெட்டின் நட்சத்திர வீரர் ஜோ ரூட் ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் ஐயாயிரம் ரன்களை தொட்டார். இதன் மூலம் ஐ.சி.சி டெஸ்ட்' சம்பியன் ஷிப் ஐயாயிரம் ரன்களை கடந்த முதல் பட்ஸ்மேன் என்ற பெருமை யைப் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி முல்தானில் நடைபெற்று வருகிறது. இதில் பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 566 ரன்களைக் குவித்த நிலையில் இங்கிலாந்து இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கியது.

நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 96 ரன்களை எடுத்திருந்தது.

ஜோ ரூட் 32 ரன்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இவர் ஏற்கனவே 1000 ரன்களைக் கடந்து சாதனை படைத்துள்ளார்.


தற்போது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மட்டும் விளையாடி வருகிறார். அதன் மூலம் ஒரு வருடத்தில் 1000 ரன்களை அதிக முறை கடந்த சச்சின் டெண்டுல் கர் சாதனையையும் நெருங்கி வருகிறார். சச்சின் ஆறு முறை 1000 ரன்களை தாண்டியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3240


மதுஷா




சிந்து




பாபு




தினேஷ்




தன்விகா




விதுஷா





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆயுதங்களை தேடி முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணி இடைநிறுத்தம்

(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்காலில் ஆயு தங்களைத் தேடி முன்னெடுக்கப் பட்ட அகழ்வுப் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது முல்லைத் தீவு மாவட்டத்தின் முல்லைத் தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகு தியில் உள்ள விளையாட்டு கழக மைதானத்தில் தமிழ் ஆயுத போராட்ட அமைப்பின ரால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாக தெரிவித்து கொழும்பு நீதிமன்றின் அனு மதியுடன் குறித்த அகழ்வுப் பணியானது கொழும்பில் இருந்து வருகைதந்த பொலிஸ் குழுவினரால் முன்னெடுக்கப்



பட்டிருந்தது.

குறித்த அகழ்வு பணியின் போது எவ்வித ஆயுதங்களும் கிடைக்கப்பெறாத நிலையில் அங்கு தண்ணீர் அதிக வரத்து ஏற்பட்டமையால் அகழ்வு பணி இடைநிறுத்தப்பட்டு நேற்றுக் காலை மீளவும் தண்ணீர் அகற் றும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு முள்ளிவாய்க் கால் கிழக்கு, மேற்கு பகுதிக ளில் அண்ணளவாக 11 இடங்க ளில் இதுவரை அகழ்வு பணி கள் இடம்பெற்ற நிலையிலும் ஆயுதங்கள் எதுவும் கிடைக் காத நிலையில் குறித்த அகழ் வுப் பணியானது இடைநிறுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (6)


# தமிழ் மக்கள் கூட்டணி வேட்பு மனுத்தாக்கல்




(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் கூட்டணி யினர் மான் சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை யாழ்.மாவட்ட செயல கத்தில் நேற்று கையளித்தனர்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நீதியரசர் சி.வி.விக்னேஸ் வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியின் கட்சியி னர் நேற்று யாழ்ப்பாணம் தேர் தல் மாவட்டத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர். (6-33)






யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தினதும் கத் தோலிக்க மாணவர் ஒன் றியத்தினதும் பொன்விழா நிகழ்வுகள் கடந்த 6 ஆம் திகதி நல்லாயன் ஆன் மிகப் பணியகத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்வினை யாழ்ப் பாணப் பல்கலைக்கழ கத்தின் கிறிஸ்தவ நாகரி கத்துறை ஒழுங்கு செய்தி ருந்தது.

கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் முதல் ஆன்மிக வழிகாட்டியாகச் செயற்பட்ட அருட்திரு ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கத்தோலிக்க ஒன்றியத்தின் ஐம்பதாண்டு வரலாறு மற்றும் பல்கலைக் கழகச் சமூகத்தில் அதன் செல்வாக்கு ஆகியவற்றை ஆவணப்படுத்தும் நூல் வெளியிட்டு வைக்கப்பட் டது.

# பாப்பரசரின் வாழ்த்து அநுரவிடம் கையளிப்பு



(கொழும்பு)

பரிசுத்த பாப்பரசர் பிரான் சிஸின் வாழ்த்துச் செய்தியை வத்திக்கான் பிரதிநிதி ஜனா திபதிக்கு கையளித்துள்ளார்.

இலங்கைக்கான வத்திக் கான் அப்போஸ்தலிக்க பிரதி நிதி வணக்கத்திற்குரிய பிரை யன் உதைக்வே ஆண்டகை ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவை நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தி ருந்தார்.

இந்நிலையில் இலங்கை யின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திஸா நாயக்கவுக்கு தனது வாழ்த் துக்களைத் தெரிவித்த வத் திக்கான் பிரதிநிதி, கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும் இறைமைமிக்க வத்திக்கான் அரசின் பரிசுத்த பாப்பரசர் முத லாவது பிரான்சிஸ் உளப்பூர் வமான வாழ்த்துச்செய்தியையும் ஜனாதிபதிக்கு கையளித்தார்.

ஜனாதிபதியின் தொலை நோக்குப் பார்வை மற்றும் அர்ப்பணிப்பை பாராட்டிய வத்திக்கான பிரதிநிதி அந்த முயற்சிகள் அனைத்திற்கும் வத்திக்கான் ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

10.10.2024
புரட்டாதி 24, வியாழக்கிழமை
சப்தமி முற்பகல் 8.04 மணிவரை

பூராடம் பின்னிரவு 2.07 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை

சந்திராஷ்டமம்: கார்த்திகை, ரோகினி

வளவன்

**மேஷம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன் னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந் தப்பட்ட வகையில் நன்மையுண்டு, மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காண்பீர்கள்.

**கடகம்**
எதிர்ப்பாக இருந்தவர் கள் மனம் மாறுவர், வழிபாடு சிறப்பினைத் தரும், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், தொலை பேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**துலாம்**
செயற்பாடுகளில் உற்சா கம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சேமிப்பை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் உருவாகும்.

**மகரம்**
வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**ரிஷபம்**
கேட்ட இடத்தில் உதவி கள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகா ரங்களில் தலையிடுவ தைத் தவிர்ப்பது நல்லது, வழி பாட்டால் மகத்துவம் காண வேண் டிய நாள்.

**சிம்மம்**
பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள், பணத்தேவை கள் திருப்தி தரும் வகை யில் அமையும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்**
குடும்ப மகிழ்ச்சி அதிக ரிக்கும், வாக்கு மேன் மையுண்டு, பொருளா தார நிலையில் முன் னேற்றம் காணும் நாள், நண்பர் கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்**
பொது வாழ்வில் பாராட் டும் புகழும் கூடும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**மிதுனம்**
உறவினர்களின் சந்திப் பால் உள்ளம் மகிழ் வீர்கள், பணத்தேவை கள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர் புகள் அனுகூலம் தரும்.

**கன்னி**
பேச்சில் கனிவு பிறக் கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமை யும், சுப செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**தனுசு**
மற்றவர்களின் விமர்ச னங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பெரிய மனி தர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், செய்தொழில் மேன் மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளறிக்கொட்டுபவனை விட ஊமையே சிறந்தவன்.

# யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 13-15 வரை டெங்கு களத்தரிசிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாண மாவட்டவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை டெங்குக் கட்டுப்பாட்டு களப்பரிசோதனை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்தி குறிப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆம் திகதி கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்போடு கிராமமட்ட அமைப்புக்களை வலுப்படுத்தி அவர்கள் மூலமாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி பொதுமக்கள் குடியிருப்பு பகுதிகளிலும் 14 ஆம் திகதி அனைத்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் அலுவலகங்களிலும் 15 ஆம் திகதி அனைத்து பாடசாலைகள் (காலை), தனியார் கல்வி நிலையங்கள் (மாலை) மேற்குறித்த பகுதிகளில் டெங்கு பரம்பல் தொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கக்கப்படவுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)

# 1 கோடி ரூபா பெறுமதியான பொருட்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

நாட்டிற்கு சட்ட விரோதமான முறையில் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான தொலைபேசிகள், மதுபானப் போத்தல்கள் மற்றும் போதைப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டுவந்த குற்றச் சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

44 வயது மதிக்கத்தக்க குறித்த நபர் நேற்றுக் காலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6)

# ஜனாதிபதியை சந்தித்தார் சுவிட்ஸர்லாந்து தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸ்ஸநாயக்கவை சந்தித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு வாழ்த்துத் தெரிவித்த தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் மற்றும் அந்நாட்டு மக்களின் வாழ்த்துக்களையும் ஜனாதிபதிக்கு தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது செயற்படும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் ஊடாக சுவிட்ஸர்லாந்து இலங்கைக்கு ஆதரவளிக்க உறுதி பூண்டுள்ளதாக உறதிப்படுத்திய தூதுவர் ஊழலுக்கு எதிரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் முயற்சிகளுக்கு சுவிட்ஸர்லாந்து ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கும் சுவிட்ஸர்லாந்துக்கும் இடையிலான வலுவான இராஜதந்திர உறவுகளையும் இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் நிர்வாக விடயங்களில் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சுவிட்ஸர்லாந்தின் தொடர்ச்சியான ஒத்துழைப்பையும் தூதுவர் மீண்டும் உறுதிப்படுத்தினார். (நி)

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வேட்பு மனுத்தாக்கல்




(யாழ்ப்பாணம்)

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுவை யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று கையளித்தனர்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் கட்சியினர் நேற்று யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்தனர்.

த.சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், குருசாமி சுரேந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், சி.சிவகுமார், சசிகலா ரவிராஜ், சிவநாதன் ரவீந்திரா மற்றும் ஜெ.ஜெனார்த்தனன் ஆகியோர் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-33)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜே.வி.பி வேட்பு மனுத்தாக்கல்



(யாழ்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் நேற்றுமுன்தினம் வேட்புமனுவில் கையொப்பமிட்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் முன்னிலையில் வேட்பாளர்கள் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் கையொப்பமிட்டனர்.

கருணநாதன் இளங்குமரன், மருங்கன் மோகன், பூலோகராஜா சிறீதரன் ,காராளசிங்கம் பிரகாஷ், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், வெண்ணிலா ராசலிங்கம், சண்முகநாதன் சிறீ பவானந்தராஜா, தேவராசா தஜீவன் மற்றும் உதயகுமாரன் கீர்த்தி ஆகியோர் வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளனர். (6-33)


# சட்டவிரோதமாக கடத்தப்பட்ட 20 மாடுகள் மீட்பு

## சாவகச்சேரி பொலிஸார் அதிரடி

(சாவகச்சேரி)

கிளிநொச்சியில் இருந்து சட்டவிரோதமாக யாழ்ப்பாணத்திற்கு லொறியில் கடத்தப்பட்ட 20 மாடுகளை கடந்த திங்கட்கிழமை மீசாலைப் பகுதியில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்போது 19 மாடுகள் உயிருடனும் ஒரு மாடு உயிரிழந்த நிலையிலும் மீட்கப்பட்டதுடன் லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



மேற்படி மாடுகள் உரிய அனுமதிப்பத்திரம் இன்றிக் கடத்தி வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட மாடுகளை சாவகச்சேரிப் பொலிஸார் பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-30)

# வெளிவந்த சிவதொண்டன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவ தொண்டன் நிலையத்தினரால் வெளியிடப்படும் செப்ரெம்பர் ஒக்டோபர் மாதத்திற்கான 88 ஆவது சிவதொண்டன் மலர் வெளிவந்துவிட்டது. (6)



கம்பர்மலை கலாவாணி முன்பள்ளியில் ஆசிரியர், சிறுவர்தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

(படம்- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தலுக்காக 8 நாடுகளின் கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு-தேர்தல்கள் ஆணைக்குழு


(கொழும்பு)

**பாராளுமன்ற தேர்தலை கண்காணிப்பதற்காக 8 நாடுகளின் கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது**

சார்க் நாடுகள் மற்றும் ரஷ்யாவில் இருந்து கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு வருவதாக ஆர்.எம். ஏ.எல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். இதற்கு மேலதிகமாக பொது நலவாய தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற் றும் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்ளும் இலங்கைக்கு விஜயம் செய்து பொதுத் தேர்தல் நடவடிக்கைகளை அவதானிக்க உள்ளனர். மேலும் பொதுத் தேர்தலை கண்காணிக்க ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பார்வையாளர்களும் வர உள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சர்வதேச புகைப்பட விருது வென்ற இலங்கையர்



(லண்டன்)

லண்டனின் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டின் சிறந்த வனவிலங்குப் புகைப்படக் கலைஞர் விருதுகளில் "பாலூட்டிகளின் நடத்தை" பிரிவில் இலங்கை புகைப்படக் கலைஞர் ஒருவர் விருது வென்றுள்ளார்.

ஹிக்கடுவப் பகுதியைச் சேர்ந்த லியனகே பிரசாந்த வினோத் என்ற நபரே சர்வதேச விருதினை வென்ற புகைப்படக் கலைஞர் ஆவார்.

வாழ்விட இழப்பு மற்றும் விவசாயிகளுடனான மோதல்களுக்கு மத்தியில் இலங்கையின் டோக் மக்காக் குரங்குகள் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துரைக்கும் புகைப்படத்துக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

அவர் எடுத்த அந்தப் புகைப்படத்தில் குட்டிக் குரங்கொன்று. தனது தாயின் அரவணைப்பில் படுத்து உறங்குவது படம்பிடிக்கப்பட்டுள்ளது. (நி)

# வேலைவாய்ப்பின்றி 263, 274 இளைஞர்கள்

## சனத்தொகை மதிப்பீட்டு திணைக்களம்

(கொழும்பு)

நாட்டில் 15 முதல் 29 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களில் 2 இலட்சத்து 63 ஆயிரத்து 274 பேர் தொழில் அற்றவர்களாக காணப்படுவதாக சனத்தொகை மதிப்பீட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளி விபர ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள 18 முதல் 24 வயதுக்கு இடைப்பட்ட ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 606 பேர் தொழில் அற்றவர்களாக காணப்படுகின்றனர். 25 முதல் 29 வயதுக்கு இடைப்பட்டவர்களில் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 668 பேர் இந்த நிலையில் உள்ளார்கள்.

நாட்டில் வேலையற்றவர்களுள் ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 406 பேர் க.பொ.த உயர்தரம் அல்லது அதனை விட அதிக தகைமைகள் உடையவர்கள்.

க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்த ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 234 பேர் உள்ளடங்கும் நிலையில் சித்தியடையாதவர்கள் 86, 822 பேர் தொழில் இல்லாமல் உள்ளனர்.

எனவே இளைஞர்கள் மத்தியில் பிரதான சிக்கலாக மாறியுள்ள தொழிலின்மையை குறைப்பதற்காக அரசாங்கம் செய்றபட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# கேக்கின் தரத்தினை பரிசோதிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

கேக் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் பொருட்களைப் பரிசோதிப்பதற்கு இலங்கையில் இது வரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும், இதனால் லேபிள்களில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான பொருட்கள் போலியானவை என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சந்துன் ரத்நாயக்க வலியுறுத்தினார்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் பெரும்பாலான நிறுவனங்கள் முட்டை அல்லது வெண்ணெய் அல்லது மாஜரின் போன்றவற்றை கேக் உற்பத்திக்கு பயன்படுத்துவதில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்படி, தயாரிப்புகளில் பெரும்பாலும் வெண்ணெய் சுவை மற்றும் செயற்கை முட்டை சுவை உள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குறிப்பிட்டார்.

மேலும் சந்தையில் இருந்து கொள்வனவு செய்யப்படும் கேக்குகள், முட்டை அல்லது வெண்ணெய் அல்லது மாஜரின் கொண்டு தயாரிக்கப்படவில்லை என்பதையும் நுகர்வோர் நினைவில் கொள்ள வேண்டும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (நி)


கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: Bsc, Msc, Project Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, குணமான பெண்<br>தொ.இ: B/14816 | பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>7 இல் செவ்<br>கி.பா: 80<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, IT Engineer<br>தொ.இ: G/14830 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 39 3/4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: HNDA, Sales Representative<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14820 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>2 இல் செவ்<br>கி.பா: 42 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Pharmacist, மருந்தாளர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14831 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 1/2<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்: A/L, Factroy (German), மணமகன் விவாகரத்து<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள் தகுதியான பெண்<br>தொ.இ: B/14821 | பிறப்பு: 1981 RC<br>நட்சத்திரம்: மூலம்<br>11 இல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/14832 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உச்சி மாநாடுகளில் பங்கேற்க லாவோஸ் செல்லும் மோடி



(டில்லி)
தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் இந்தியா இணைந்த ஆசிய-இந்தியா அமைப்பின் 21 ஆவது உச்சிமாநாடு லாவோஸ் தலைநகர் வியன்டியனில் நாளை நடைபெறவுள்ளது.

இதே போன்று கிழக்கு ஆசியா அமைப்பின் 19 ஆவது உச்சி மாநாடும் அங்கு நடைபெறுகிறது.

இந்த மாநாடுகளில் பங்கேற்க வருமாறு பிரதமர் மோடிக்கு அந்த நாட்டு பிரதமர் சோனக்சய் சிபன்டோன் அழைப்பு விடுத்தார். இதை ஏற்று பிரதமர் மோடி இந்த மாநாடுகளில் பங்கேற்க உள்ளார்.

இதற்காக 2 நாள் பயணமாக அவர் லாவோஸ் செல்கிறார். அங்கு அவர் மேற்படி 2 மாநாடுகளிலும் பங்கேற்கிறார்.

அத்துடன் இந்த மாநாடுகளுக்கு இடையே உறுப்பு நாடுகளின் தலைவர்களை தனித்தனியாக சந்தித்து இருதரப்பு உறவுகளையும் மேம்படுத்துவது குறித்து பிரதமர் மோடி பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார். (நி)

## இந்திய-சீன எல்லையில் பறந்த சீன உளவு பலூன் சுட்டு வீழ்த்திய இந்திய விமானப்படையினர்

(டில்லி)
இந்திய சீன எல்லையின் கிழக்கே, சீனாவின் உளவு பலூனானது சுமார் 55,000 அடி உயரத்தில் பறந்துள்ளது. அந்த பலூனை ரஃபேல் விமானத்தைக் கொண்டு இந்திய விமானப்படையானது சுட்டு வீழ்த்தியதாகத் தெரிய வந்துள்ளது.



ஒரு நாடு மற்றொரு நாட்டின் அனுமதி இல்லாமல் அந்நாட்டின் எல்லைப் பரப்பிலோ அல்லது எல்லையைக் கடந்தோ ட்ரோன்களைப் பறக்கவிடுவது அல்லது சந்தேகத்திற்கு இடமான வகையில் ஏதாவது ஒரு வகையில் உளவு பார்ப்பது சட்டப்படி குற்றமாகும்.

அந்த வகையில் நேற்று முன்தினம் இந்திய-சீன எல்லையின் கிழக்கே, சீனாவின் உளவு பலூனானது சுமார் 55,000 அடி உயரத்தில் பறந்துள்ளது. இது இந்திய இராணுவத்தினரிடையே பதற்றத்தினை ஏற்படுத்தியது.

இதையடுத்து இந்திய இராணுவத்தின் அனுமதியை அடுத்து, இந்திய விமானப்படையானது வங்காளத்தில் உள்ள ஹசிமாரா பகுதியிலிருந்து சீன உளவு பலூனை ரஃபேல் விமானத்தைக் கொண்டு சுட்டு வீழ்த்தியதாகத் தெரிய வந்துள்ளது. மேலும் வங்காள விரிகுடா, அந்தமான், நிக்கோபார் தீவுகளிலும் சீன பலூன் காணப்பட்டாலும் அது இந் திய எல்லையைக் கடக்காத தால் இந்தியப் படைகள் அந்த பலூனை சுட்டு வீழ்த்தவில்லை என கூறப்பட்டுள்ளது. (நி)

## விஞ்ஞானிகள் 3 பேருக்கு வேதியியல் நோபல் பரிசு அறிவிப்பு



(ஸ்டார்ஹோம்)
2024 ஆம் ஆண்டுக்கான வேதியியல் துறைக்கான நோபல் பரிசு மூவருக்கு பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று வேதியியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் மற்றும் இங்கிலாந்தை சேர்ந்த இருவருக்கு பகிர்ந்து அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டேவிட் பெக்கர், டெமிஸ் ஹசாபிஸ், ஜான் ஜம்பர் ஆகியோருக்கு ' புரதத்தை கட்டமைத்தல் மற்றும் ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு உள்ளது. (நி)

## உக்ரைன் இல்லாமல் ரஷ்யாவுடன் பேசமுடியாது

### உறுதிபடத் தெரிவித்தார் கமலா ஹாரிஸ்



(வோஷிங்டன்)
ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிரான உக்ரைனின் தற்காப்பு நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிக்கிறோம். உக்ரைனை ஆதரிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். உக்ரைன் இல்லாமல் ரஷ்யா உடன் பேச்சுவார்த்தை இல்லை என்று கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் பேசுகையில், "ஐ.நா மற்றும் உக்ரைன் இல்லாமல் போரை முடிவுக்கு கொண்டு வருவது சாத்தியமற்றது.


இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர தேவையான நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து அமெரிக்கா ஒருபோதும் பின்வாங்காது. ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு

## பதற்
## ஈரா

(டெஹ்ரான்) —
அமெரிக்காவும்
நட்பு நாடுகளும்
தணிக்க ஈரானுட
ஆரம்பித்துள்ள

ஷியைட் தேசத்தின் மீது பதிலடி கொடுக்கும் இஸ்ரேலிய தாக்குதல்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் காசா மற்றும் லெபனான் உட்பட அனைத்து முனைகளிலும் விரிவான போர்நிறுத்தத்தை எட்டுவதற்கு அமெரிக்கா மற்றும் அரபு நாடுகள் தெஹ்ரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக

## தென்கொரியாவ
## துண்டித்த




(பியாங்யாங்)
வட கொரியாவின் இராணுவம் நேற்று புதன்கிழமை முதல் தென் கொரியாவுடன் இணைக்கப்பட்ட வீதிகள் மற்றும் ரயில் பாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற்றத்தை தணிக்க ...னுடன் இரகசிய பேச்சு

**...வும் வளைகுடாவில் உள்ள அதன் ...ும் மத்திய கிழக்கில் பதற்றத்தை ...னுடன் இரகசியப் பேச்சுக்களை ...ளன.**



இஸ்ரேலின் சனல் 12 செய்தி தெரிவித்தது.

அந்தத் தகவல்களுக்கு அமைய, இம் முயற்சியில் இஸ்ரேல் தற்போது ஈடுபடவில்லை என்றும் ஆனால் இது குறித்து சிரேஷ்ட இஸ்ரேலிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் சனல் 12 செய்தி தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் லெபனானில் போர் நிறுத்தம் செய்வதற்கான முக்கிய கோரிக்கையை தீவிரவாத அமைப்பு கைவிட்டதாக கூறப்படுகிறது.

காசா பகுதியில் அமைதி ஏற்படும் வரையில் போர் நிறுத்தத்துக்கு உடன்படமாட்டோம் என ஹிஸ்புல்லா இதுவரை கூறி வந்தது.

ஆனால் கடந்த செவ்வாய்க்கிழமை ஹிஸ்புல்லாவின் பிரதித் தலைவர் நைம் காசிம், லெபனான் பாராளுமன்ற சபாநாயகர் நபிஹ் பெர்ரியின் போர் நிறுத்த முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ...ாவுடனான போக்குவரத்தை ...ந்தது வடகொரியா



போக்குவரத்தினை முற்றிலுமாக துண்டித்தது.

தனது எல்லையில் உள்ள பகுதிகளின் பாதுகாப்பினைப் பலப்படுத்தும் நோக்குடன் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வடகொரிய அரச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் கொரிய மக்கள் இராணுவம் இந்த நடவடிக்கையை "போரைத் தடுப்பதற்கான ஒரு தற்காப்பு நடவடிக்கை" என்று விவரித்தது.

இரு கொரிய நாடுகளுக்கும் இடையிலான பதற்றங்கள் பல ஆண்டுகளாக மிக உயர்ந்த இடத்தில் இருக்கும் நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. (நி)

எதிரான உக்ரைனின் தற்காப்பு நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிக்கிறோம். உக்ரைனை ஆதரிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். உக்ரைன் இல்லாமல் ரஷ்யா உடன் பேச்சுவார்த்தை இல்லை.

அமெரிக்க மக்களுக்கும் இஸ்ரேலிய மக்களுக்கும் இடையிலான ஒரு நல்ல நட்புறவு உள்ளது. இஸ்ரேல் தலைமையில் ராஜதந்திர ரீதியாக நாங்கள் செய்யும் பணி, நம் நாட்டு கொள்கைகளை தெளிவுபடுத்துவதற்கான ஒரு தொடர் முயற்சி. என்னுடைய பொருளாதார திட்டங்கள் அமெரிக்க பொருளாதாரத்தை வலுப்படுத்தும் என்று தெரிவித்துள்ளார். (நி)

## காசாவைப் போல் லெபனானும் அழிவைச் சந்திக்கும்

(ஜெருசலேம்)

காசாவைப் போன்று லெபனானும் அழிவைச் சந்திக்குமென இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லெபனான் நீண்ட போரை எதிர்கொள்வதற்கு முன்னதாக அதனைக் காப்பாற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணொளி ஊடாக லெபனான் மக்களிடம் உரையாற்றிய போதே இஸ்ரேலிய பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஹிஸ்புல்லாவை புறந்தள்ளி காசாவில் நாம் பார்ப்பது போன்ற அழிவு மற்றும் சிரமங்கள் லெபனானில் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு வலியுறுத்துமாறும் அந்த நாட்டு மக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஹிஸ்புல்லாவிடம் இருந்து நாட்டை விடுவிப்பதன் மூலம் இந்தப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனவும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லாவுக்கு எதிராக இஸ்ரேல் தமது தரை வழித் தாக்குதலை விரிவுபடுத்தியுள்ளது.

இஸ்ரேல் ஆயிரக்கணக்கான படையினரைத் தென்மேற்கு லெபனானில் நிலை நிறுத்தியுள்ளது.

இதனிடையே ஹிஸ்புல்லா தரப்பினர் தொடர்ந்தும் மூன்றாவது நாளாக இஸ்ரேலின் துறைமுக நகரமான ஹைஃபா மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதலில் சுமார் 12 பேர் காயமடைந்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றிகளில் பரவும் வைரஸ்!

## அவதானத்துடன் செயற்படுமாறு

# எச்சரிக்கை விடுப்பு

**(கொழும்பு) — பண்ணைகளிலுள்ள பன்றிகளில் வேகமாக வைரஸ் தொற்று பரவிவருவதாகவும் இவ்வாறு வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு இறக்கும் பன்றிகள், இறைச்சியாக விற்பனை செய்யப்படுவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இந்தநிலையில், வைரஸால் பாதிக்கப்பட்டு இறக்கும் பன்றிகளின் இறைச்சியை குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைத்து கிலோ 300 முதல் 400 ரூபாய் வரை விற்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜாஎல பிரதேச சபையில் இடம்பெற்ற கூட்டத்தில், ததுகம பிரதேசத்தில் பன்றி பண்ணைகளில் பன்றிகள் உயிரிழந்தமை குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள பன்றி பண்ணைகளில் தினமும் சுமார் 50 பன்றிகள் இறக்கின்ற நிலையில் அந்த பன்றிகளின் இறைச்சி குறைந்த விலைக்கு மனித நுகர்வுக்கு விற்கப்படுவதாகவும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களின் பன்றிப் பண்ணைகளில் உள்ள பன்றிகளுக்குள் வைரஸ் தொற்று பரவிவருகின்றதாக அரசாங்க கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த வைரஸ் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவுமா என்பதை பரிசோதிக்கும் திறன் கால்நடை மருத்துவர்களுக்கு உள்ளது என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 160 | 100-130 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 330 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 250-300 | 400 |
| தக்காளி | 200 | 200 | 400 | 220 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 250 | 200 | 150-200 | 200 |
| கோவா | 180 | 300 | 200 | 280 | 300 |
| கரட் | 160 | 200 | 250 | 250 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 70 | 120 | 100 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 200 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 200-350 | 300 |
| பெரிய வெங்காயம் | 320 | 240 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 400 | 500 | 450 | 500-650 | 500 |
| வெண்டக்காய் | 150 | 200 | 100 | 150-170 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 200 | 150 | 240 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 300-400 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 300 | 260 | 300 |
| பீற்றூட் | 140 | 160 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 500 | 500 | 450 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 300 | 200-300 | 400 |
| போஞ்சி | 350 | 500 | 450 | 320 | 500 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 180 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 300 | 450 | 350-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 140 | 130 | 80-160 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 1500 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 450 | -- | 500 |
| முள்ளங்கி | 100 | 130 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 120 | 80 | 100 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 120 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 160 |

# இன்று ஒரு தகவல் 237



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## அன்னரச அமிர்த சஞ்சீவி

அன்னரச அமிர்த சஞ்சீவி என்றால் என்ன தெரியுமா உங்களுக்கு? நானும் கொஞ்ச நாளைக்கு முன்பு தான் அப்படி என்றால் என்ன என்று புரிந்து கொண்டேன்.

கிராமத்திலே ஒரு பழைய கால வீடு. அந்த வீட்டில் இருந்த அலுமாரியை சுத்தம் செய்யும் போது பழைய புத்தகம் ஒன்று கிடைத்தது. அதனை ஒரு பெரியவர் எடுத்து என்னிடம் கொடுத்தார். வாங்கிப் பார்த்தேன். தலையணை மாதிரி இருந்தது. அவ்வளவு மிகவும் பெரிய புத்தகம். 904 பக்கங்கள். விலை எவ்வளவு என்று பார்த்தேன். 3 ரூபாய் 12 சதம் என்று இருந்தது.

68 வருடங்களுக்கு முன்பு வெளியான புத்தகம் 20.05.1925 அன்று 8 ஆம் பதிப்பு 4000 பிரதிகள் போட்டு இருக்கிறார்கள்.புத்தகத் தலைப்பு என்ன தெரியுமா? ஜீவப்பிரம்மை ஆகிய வேதாந்த ரகசியம். அதில் முதல் பக்கத்தில் என்ன ஏழுதி இருந்தது தெரியுமா? "இது வெட்ட வெளிப்பரம்பரையில் வந்த ஸ்ரீ நித்தியானந்த சுவாமிகளின் பிரியமான சீடராகிய கடப்பை பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்வரர் அவர்களால் இயற்றி சென்னை சூளை "ஸ்ரீ பாரதி"அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" என்று இருந்தது.

அந்த புத்தகத்தை பார்த்த பின்பு தான் "அன்னரச அமிர்த சஞ்சீவி" என்றால் என்ன என்று புரிந்து கொள்ள முடிந்தது. அது வேறு ஒன்றும் இல்லை. "அன்னரசம்" என்றால் என்ன அன்னம் என்றால் சோறு, ரசம் என்றால் சாறு அன்னரசம் என்றால் நீராகாரம். அது தான் அன்னரச அமிர்த சஞ்சீவி. அந்த அளவிற்கு அதில் விடயம் இருக்கா என்று நீங்கள் கேட்கலாம். இருக்கு அது தான் இன்றைக்குத் தகவல். பழைய சாதமும் அதன் நீரும் சாப்பிட்டு வந்தால் அவர்களுக்கு மலச்சிக்கல் இல்லாமலும் சரீரத்திற்கு எவ்விதமான வியாதிகளும் இல்லாமலும் எப்பொழுதும் சுகமாக இருப்பார்கள் என்று அந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறது.

பழைய சாதம் எப்படித் தயார் செய்வது என்ற விபரமும் அதில் இருக்கிறது. இது என்ன பெரிய விடயம். இரவில் மீதமாகவுள்ள சோற்றிலே தண்ணீரை ஊற்றி வைத்தால் மறு நாள் காலையில் அது தான் பழைய சோறு என்று சொல்லத் தோணுதோ? அப்படியில்லை.

இதிலே சில நுணுக்கம் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். குக்கரிலே சாதம் செய்யும் காலம் இது. அந்தக் காலத்திலே அப்படியில்லை.இரவிலே சாதம் வடித்த பின்பு ஒரு பாத்திரத்திலே சுத்தமான தண்ணீரை விட்டு கொதிக்க வைக்க வேண்டும். சாதம் வடித்த கஞ்சி இருக்கிறது அல்லவா. அதன் மேலே படிந்து இருக்கின்ற ஏட்டை எடுத்துவிட்டு அந்த கஞ்சியை குடும்பத்திற்கு வேண்டும் என்கின்ற அளவிற்கு எடுக்க வேண்டும்.

இரண்டு பங்கு இந்த கஞ்சி நீர், ஒரு பங்கு கொதித்து ஆறிய தண்ணீர், இது இரண்டையும் ஒரு பாத்திரத்திலே கலந்து வைக்க வேண்டும்.

இரவு எல்லோரும் சாப்பிட்ட பின்பு மிகுதியாக இருக்கின்ற சாதம் இருக்கும் அல்லவா அதிலே இதை ஒரு பாத்திரத்திலே கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வளவு தான்.

காலையிலே எழுந்து பல் துலக்கி, குளித்து எல்லாம் முடிந்த பின்பு சாப்பிட உட்காருங்கள். இதற்கு இலை வேண்டாம். ஒரு கிண்ணத்திலே சாதத்தை எடுத்துப் போட்டுக் கொள்ளுங்கள்.

அதற்கு மேலே ஒரு இரண்டு அங்குல உயரத்திற்கு வருகின்ற மாதிரி தண்ணீரையும் ஊற்றிக் கொள்ளுங்கள். கொஞ்சம் அதிகமாக உப்பு போட்டுக் கொள்ளுங்கள். ஊறுகாய் ஏதாவது பக்கத்திலே வைத்துக் கொள்ளுங்கள். சோற்றை சாப்பிட்டு அந்த தண்ணீரையும் குடித்துக் கொள்ளுங்கள்.

மழைக்காலம், குளிர்காலம் எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஆயுள் பூராகவும் இதை சாப்பிட்டுக் கொண்டு வரலாம். இப்படி சாப்பிட்டு வந்தால் எந்தக் காலத்திலேயும் எந்த நோயும் நம்மிடம் வராது என்று உத்தரவாதம் கொடுக்கிறார். அந்த மகான்.

சின்னப் பிள்ளைகளிலே இருந்து பெரியவர்கள் வரைக்கும் எல்லோரும் ஆறு மாதம் இப்படி சாப்பிட்டுக் கொண்டு வந்தாலே அதனுடைய பலன் என்ன என்பதை நீங்கள் உணர ஆரம்பித்து விடுவீர்கள். அதன் பின்பு மற்றவர்கள் வேண்டாம் என்று சொன்னாலும் நீங்கள் விடமாட்டீர்கள். இன்னொரு வைத்தியம் உண்டு. குடல் சுத்தமாக வேண்டுமா? வேறு ஒன்றும் வேண்டாம் என்று சொன்னாலும் நீராகாரத்தை ஒரு டம்பளர் எடுத்துக் கொள்ள வேண்டியது.

கொஞ்சம் அதிகமாக மாதிரி உப்பை போட்டுக் கொள்ள வேண்டும். ரொம்ப அதிகமாக திகட்டுற அளவுக்குப் போட்டுக் கொள்ளக் கூடாது. காலையிலே வெறும் வயிற்றிலே சாப்பிட வேண்டும். உடனே தாம்பூலம் போட்டு விழுங்க வேண்டும் அவ்வளவு தான். அந்த பழைய சாதத்திலே தயிர், மோர் விட்டு சாப்பிடலாம். திமிர், சோம்பேறித்தனம் கொட்டாவி, தூக்கம், மந்தப்புத்தி எல்லாம் வந்து விடுமாம். அது என்னத்திற்கு நமக்கு வம்பு? ஏற்கனவே இருக்கிறது போதாதா?

இப்போது இது வரைக்கும் சொல்லியிருக்கின்ற விபரம் எல்லாம் ஒரு மகான் அனுபவத்திலே சோதித்துப் பார்த்து விட்டு நமக்கு சொல்லியிருக்கின்ற விடயம் தான். இது கைகண்ட அன்னரச அமிர்த சஞ்சீவி ஔஷத மென்று அறியக் கடவீர்களாக! என்று அவர் எழுதியிருக்கிறார்.

அதை இப்போது உங்கள் காதிலேயும் போட்டு வைத்துவிட்டேன். உங்கள் வீட்டிலே இருக்கிற மற்றவர்கள் காதிலேயும் இது விழுந்திருக்கலாம். பாவம் சார் நீங்க.

நாளைக்கு காலையிலேயிருந்து உங்க வீட்டு காலை ஆகாரம் வித்தியாசமாக இருந்தா அதற்காக என்னைத் தேடிக் கொண்டு வராதீங்க சண்டை போடுவதற்கு. உன்னால் தான் என் கதி இப்படி ஆகிவிட்டது என்று.இதிலே மறைமுகமாக நான் உங்களுக்கு ஒரு சௌகரியமும் செய்து இருக்கின்றேன் அதையும் நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

உங்கள் வீட்டிலே இதுதான் காலை உணவு என்று தெரிந்து போய்விட்டது என்றால் அதன் பின்பு உங்கள் வீட்டிற்கு விருந்தாளிகள் யாரும் வரமாட்டார்கள். அப்படியே வந்தாலும் வருகிற வழியிலே இருக்கிற கடையிலே ஒரு வாய் சாப்பிட்டு விட்டு வந்து விடுவார்களே! இதை நினைத்து பார்த்தாவது நீங்க எனக்கு நன்றி சொல்ல வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு விழா இன்று

(முறிகண்டி)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் மாவட்ட பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்தும் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா இன்று காலை 9 மணிக்கு கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை திறந்த வெளி அரங்கில் இடம் பெறும்.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான எஸ்.முரளிதரன் அவர்களின் தலைமையில். இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள். விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன்,சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி. லாகினி நிருபராஷ் மற்றும் கிளி. இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை அதிபர் சு.சுதாஸகரன், கிளி/திருவையாறு கலைக்ரிசில் நா.யோகேந்திரநாதன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக பூநகரி கலாசாரப் பேரவையின் உப தலைவர் கலாபூஷணம் பொன் தில்லைநாதன், கரைச்சிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை உறுப்பினர் கலாபூஷணம் தேவராசா தியாகராசா, பச்சிலைப் பள்ளி கலாசாரப் பேரவை உறுப்பினர் கலைக்குரிசில் செல்லையா சுந்தரம் பிள்ளை மற்றும் கலைக் கிளி ஆ.பாலேஸ்வரன் (காசிமணியம்) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் கலைக்கிளி விருது, இளங்கலைஞர் விருது மற்றும கலை நிகழ்வுகளும்இடம் பெறும். (6-100)

# ஜனநாயக இடதுசாரி முன்னணி வன்னியில் வேட்பு மனுத்தாக்கல்



(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவினை ஜனநாயக இடதுசாரி முன்னணி நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வன்னித்தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய இரு கட்சிகளும் இணைந்து கூட்டணியாக தேர்தலில் போட்டியிடுகின்றன.

மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நேற்று வேட்புமனுவினை தாக்கல் செய்தது.

இதன்போது வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். (6-250)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
MoneyGram Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நேற்று முன்தினம் பளை பிரதேச வைத்தியசாலை தொடக்கம் முல்லையடி இயக்கச்சி பகுதிகளில் சிரமதான நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



# துர்க்கா– லட்சுமி–சரஸ்வதி

## உலக மக்கள் அனைவரும் வழிபடும் நவராத்திரி

**"மூலத்தில் ஒன்றான முன்னைப் பழம் பொருளே நவராத்திரி திரயணங்கே! நற்சிந்தனைச் சிவதீ! அபிராமி உன்றன் அழகு விழிகளிலே! ஆவிகரைவாரை அவையிருந்தும் அம்பிகையே!"**

*சிவதி புராணம்*

அம்மா என்ற சொல்லின் பொருளாக நிற்பவள் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய முத்தேவியர்களாக விளங்குகின்ற அம்பாளே உலகெங்கும் பசு. கோமாதா- அம்மா எனத் தரும் ஒலி, சிவன் தந்தை என்றால் உமை அன்னை, எமது தாய் அம்பாளை தொழுபவர்கள் கல்வி, செல்வம், வீரம், ஞானம் முத்தி போன்ற அரும் பெரும் பாக்கியங்கள் பெற்று மகிழ்வார்கள். நவராத்திரி தினங்களில் ஆலயங்களிலும் இல்லங்களிலும் தொழில் நிறுவனங்களிலும் வழிபாடு செய்து அம்பாளின் கடைக்கண் பார்வை கிடைக்க அன்னையை துதித்து அவளை அபிராமி, அந்தாதி, தோத்திரங்கள் பாடிப் பணிவோம்.

நலந்தரும் நாமங்கள் அபிராமி அந்தாதி 50 ஆவது அந்தாதி திருநாமங்கள் அர்ச்சனை போல் அழகாகப் பாடி அம்பிகையின் பூரணமான பாதுகாப்பும் 101 பாடல்களும் பராயணம் செய்வது தான் சிறப்புடையது.

**"நாயகி நான்முகி நாராயணி கை நளின பஞ்ச சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சு வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று ஆயகியாதி உடையாள் சரணம் அரண் நமக்கே"**

**நாயகி:** அகில உலகங்களிற்கும் தலைவியான அன்னையே நாயகி, பெரிய நாயகி, மங்கள நாயகி, தையல் நாயகி, யீசக்ர நாயகி, யோக நாயகி, லோக நாயகி, வேதநாயகி என்றவாறு எல்லாம் தலைவியாக கொண்டாடப்படும் அருள்மிகு நாயகி.

**நான்முகி:**நான்கு முகங்களை உடைய பிரமனின் ஆற்றல் ஆகவும் பிராமி என்ற மாதாவாகவும் அபிராமியே விளங்குவதால் நான்முகி.

**நாராணி:** நாராயணணின் சக்தியாகவும் நாராயண னோடு தோன்றியவள், விஷ்ணு, துர்க்கை, வைஷ்ணவி எனவும் அழைக்கப்படுபவள் இவளே.

**நாராயண கைநளின பஞ்சசாயகி:** ஏக நாயகியானவள் பிரம்ம சக்தியாகவும் விஷ்ணு சக்தியாகவும் இருப்பவள். ஐங்கணைகள் தாங்கி நிற்பவள் கைநளின பஞ்சசாயகி

**சாம்பவி:** சம்பு எனும் சிவனின் மனைவி சாம்பவி. உயிர்களுக்கு நன்மை செய்பவனாகிய எம்பெருமானுடன் இணைந்து அருள்புரியும் அம்பிகை சாம்பவி. நவராத்திரி நாட்களில் குழந்தைகளை தேவியாக கருதி வழிபடுவதில் எட்டாம் நாள் 8 வயதுக் குழந்தையை அம்பிகையாகக் கருதி வழிபடும் **"குழந்தை சாம்பவி"**

**சங்கரி:** உயிர்களுக்கு இதமானவற்றையே அருள் புரியும் ஈசன் "சங்கரன்" அவருடன் இனியவை செய்பவளை சங்கரி என்றார்.

**சாதி நச்சு வாயகி மாலினி:** நஞ்சையுடைய நல்ல உயர்ந்த வகைப் பாம்பை மாலையாக அணிந்தவள்.

**வராகி:** பன்றி முகமுடைய வராகி என்ற சக்தியாக இருப்பவள்.

**சூலினி:** முத்தலைச் சூலம் என்னும் திரிசூலத்தை தரித்து அடியார்களின் மும்மலங்கள் ஆகிய ஆணவம் கன்மம், மாயையை அழிக்க ஈசனைப் போல் வல்லவள் அம்பிகை.

**மாதங்கி:** மதங்கர் குள முனிவருடைய பெண்ணாக சியாமளா தேவியின் அம்சமாக தோன்றிய அம்பிகை மாதங்கி ஆவாள்.

**"ஆய கியாதியுடையாள் சரணம் அரண் நமக்கே"** மேற்கூறிய வடிவங்களாக வரலாற்றில் பெரும் புகழ் அடைய அன்னையின் திருவடிகள் நமக்கு அரணாக சரணாக பாதுகாப்பாக விளங்கும் அபிராமி அந்தாதியாக 101பாடல்களையும் நவராத்திரி காலங்களிலும் தினமும் ஓதுவோம்.

காலச்சக்கரம் வேகமாக சுழன்று அச்சுழலில் நாம் அகப்பட்டு எண்ணில் காலம் பிறப்பதும் இறப்பதும் ஆகவே இருக்கிறோம். **இப் பிறவிப் பிணியைத் தீர்க்க** ஏதாவது மருந்து உண்டா? மந்திரம் உண்டா? தந்திரம் உண்டா? சிந்திப்போம். **நோயாளிகளுக்கு உதவியாக இருப்பவர் மருத்துவர்களே**. ஆனால் உலகில் மருத்து வர் வேறு மருந்து வேறு மருத்துவர் மந்திரத்தாலும் மருந்தாலும் தந்திரத்தாலும் நோயை நீக்கி உபகரிப்பர்.

**இங்கு நேர்மாறான இறை நிலை பிறவி நோய்க்கு மருத்துவர் இறைவனே மருந்தும் இறைவியே மந்திரமும் பரமே, தந்திரம் அம்மையும் அப்பனுமே.**

அப்பரம கருணாநிதியே! **பிறவிப் பிணியை நீக்க** மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி **"தீராத நோய் எல்லாம் தீர்க்க வல்லாள்"** என்பதனையும் தீர்த்து அருளுகிறாள். என நாவுக்கரசர் இத்தகைய பிறவிப் பிணியை தீர்க்கும் பெரும் மருத்துவனைப்பற்றியும் அப்பரமனையடையும் நெறியையும் நமக்கு தெளிவாக கூறுவன அபிராமி அந்தாதி, திருமுறைகள் , திருப்புகழ், திருவாசகம் என்பதனை அறிந்து அன்புடன் தெளிந்து திருநீற்றை நெற்றியில் சிவ சிவ எனப் பரவி அணிந்து ஆலயங்களிலும் இல்லங்களிலும் உள்ளங்களிலும் ஒளிக்குமாறு செய்வது சிறந்த சிவப்பணியாகும்.

**"ஓதி உள்ளமும் உடம்பும் தூய்மையாக இறைவன் திருவடி சேருவோம்"**

சைவச்சின்னம் "திருநீறு" அல்லது வேள்வித்தீயில் உருமாறிய "அக்கரம்- நீறு" பரவி அணிவோம். இறைநாமம் திருமுறைகள் ஒலிக்குமாறு ஓதுவோம்

காலை எழுந்ததும் உள்ளங்கையில் விரல் நுனியில் **துர்க்கா- நடுவில் மகாலட்சுமி கீழ் - சரஸ்வதி - துர்க்கா, இலட்சுமி, சரஸ்வதி தாயே அம்மா தாயே எனவும் வணங்குவோம்"**

**க.கு.க சிவபாலன் K.K.K**
**ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம் போசகர்**



(சி-333)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 602





"அம்மணி! நிமித்தம் பார்ப்பதற்காகத் தங்கள் முகத்தைப் பார்க்கவில்லை. எங்கேயோ, எப்போதோ பார்த்த முகம்போல் இருக்கிறதே என்று ஞாபகப்படுத்திக்கொள்ள முயன்றேன்."

"தெரியும், தெரியும்! நீ மிக்க மறதிக்காரர் என்று எனக்குத் தெரியும். நான் ஞாபகப்படுத்துகிறேன். ஏறக்குறைய நாற்பது நாளைக்கு முன்னால், குடந்தை ஜோதிடர் வீட்டில் முதன் முதலாகப் பார்த்தீர். பிறகு, அன்றைக்கே அரசலாற்றங்கரையில் பார்த்தீர்."

"அம்மணி! நிறுத்துங்கள்! தங்கள் வார்த்தையை நான் நம்ப முடியவில்லை. நாற்பது நாளைக்கு முன்பு தானா தங்களை முதன் முதலாகப் பார்த்தேன்! நாற்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பார்க்கவில்லை? நூறு நூறு ஜென்மங்களில் நூறாயிரம் தடவை தங்களைப் பார்க்கவில்லையா? மலை அடிவாரத்தில் பார்க்கவில்லையா? குன்றின் உச்சியிலே பார்க்கவில்லையா? நீர்ச்சுனையின் ஓரத்தில் பார்க்கவில்லையா? அடர்ந்த காட்டின் மத்தியில் கொடும் புலியினால் துரத்தப்பட்டு ஓடி வந்த தங்களை நான் காப்பாற்றவில்லையா? வேல் எறிந்து அந்தப் புலியைக் கொல்லவில்லையா? அப்போது நான் காட்டில் வேட்டையாடித் திரிந்த வேடுவனாயிருந்தேன்! விதவிதமான வர்ணச் சிறகுகள் உள்ள அழகழகான கிளிகளை வலை போட்டுப் பிடித்துக் கொண்டு வந்து கொடுத்தேன்.

தாங்கள் அந்தக் கிளிகளை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டு வானத்தில் பறக்க விட்டுக் கலகலவென்று சிரித்தீர்கள். ஒரு சமயம் நான் மீன் பிடிக்கும் வலைஞனாயிருந்தேன். தூரதூரங்களிலுள்ள ஏரிகளுக்கும் ஆறுகளுக்கும் சென்று, வெள்ளி மீன்கள், தங்க மீன்கள், மரகத மீன்களைப் பிடித்துக்கொண்டு வந்து கொடுத்தேன். அவற்றைத் தாங்கள் வாங்கிகொண்டு மறுபடியும் ஓடும் தண்ணீரில் விட்டு, அவை துள்ளி நீந்திச் செல்வதைப் பார்த்து மகிழ்ந்தீர்கள். தொலை தூரங்களிலுள்ள கடல்களுக்குச் சென்று கடலின் ஆழத்தில் மூச்சுப் பிடித்து முழுகி முத்துக்களையும், பவழங்களையும் சேகரித்துக் கொண்டு வந்து கொடுத்தேன். தாங்கள் அவற்றைக் கையினால் அளந்து பார்த்துவிட்டு, ஊரிலுள்ள சிறுவர் சிறுமிகளை அழைத்து அவர்களுடைய சின்னஞ்சிறு கைகளிலே முத்துக்களையும், பவளங்களையும் சொரிந்து அனுப்பினீர்கள். முந்நூறு வருஷங்கள் வளர்ந்த இலந்தை மரத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை விளையும் இலந்தைக் கனியைக் காத்திருந்து பறித்து வந்து, தங்களிடம் சமர்ப்பித்தேன்.

அதைத் தாங்கள் வளர்த்த நாகணவாய்ப் பறவைக்குக் கொடுத்து, அது கனியைக் கொத்திக் கொத்தித் தின்னுவதைப் பார்த்துக் களித்தீர்கள். தேவலோகத்துக்குப் போய் அங்குள்ள மந்தார மலர்களையும், முன் பொழிந்தேன். 'எங்கள் கொல்லை வேலியில் பூக்கும் முல்லை மலரின் அழகுக்கும் மணத்துக்கும் இவை ஈடாகுமா?' என்று சொல்லிவிட்டீர்கள். தேவேந்திரனிடமிருந்து அவன் அணியும் ஒப்பில்லா ரத்தின ஹாரத்தை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தேன். 'ஒழுக்க மற்ற இந்திரன் அணிந்த மாலையை நான் கையினாலும் தொடுவேனா?' என்று சொல்லி விட்டீர்கள். கைலாசத்துக்குச் சென்று, பார்வதி தேவியின் முன்னால் தவங்கிடந்து, தேவி பாதத்தில் அணியும் சிலம்பை வாங்கிக் கொண்டுவந்தேன்.

தங்கள் பாதங்களில் சூட்டி விடுவதாகச் சொன்னேன். 'ஐயையோ! ஜகன் மாதாவின் பொற்பாதச் சிலம்பு என் காலிலே படலாமா? என்ன அபசாரம்? திரும்பக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு வா!' என்றீர்கள் போர்க்களத்துக்குச் சென்று அறுபத்து நாலு தேசங்களின் அரசர்களையும் வென்று, அவர்களுடைய மணிமகுடங்களையெல்லாம் சேகரித்துக் கொண்டு வந்து தங்கள் முன் காணிக்கை செலுத்தினேன். தாங்கள், அந்த மணிமகுடங்களைக் கால்களால் உதைத்துத் தள்ளினீர்கள். 'ஐயோ! தங்கள் மெல்லிய மலர்ப் பாதங்கள் நோகுமே?' என்று கவலைப்பட்டேன்.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# கூனி செய்த குறும்பு



இராமாயணத்தில் மந்தரை எனும் கூனிக்கிழவி இருந்த கதை உங்களுக்கு தெரியுமல்லவா? இராமன் சிறுவயதில் விளையாடிக் கொண்டிருந்தபோது அவன் விளையாடிய பந்து மந்தரையின் முதுகில்பட்டு கூன் விழுந்ததாகச் சொல்வார்கள். அன்று முதல் மந்தரையை எல்லோரும் கூனிக் கிழவி என்றே கூப்பிடுவர். இராமன் மீது வஞ்சம் கொண்டாள். கூனிக்கிழவி அவளை பழி தீர்க்க எண்ணினாள்.

இராமனுக்கு உரிய வயது வந்ததும், தசரதச் சக்கரவர்த்தி அவனுக்கு பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்தார். அதை அறிந்த கூனி நேரே கையேயியிடம் சென்று பல்வேறு துர்உபதேசங்களை செய்து கையேயியின் மகன் பரதனே நாடாள வேண்டும் என்று கூறுமாறு தூண்டி விட்டாள். கையேயியும் மன்னரிடம் சென்று ஏற்கனவே தான் பெற்ற இரு வரங்கள் மூலம் இராமனை காட்டிற்கு 14 ஆண்டுகள் செல்லுமாறு செய்தாள்.

தந்தை சொல் தட்டாதத் தனையன் இராமன் வனம் சென்றான். சீதை இராமனுடன் வனம் சென்றாள். தசரதன் மாண்டான். வனத்தில் இராவணன் சீதையை சிறைப் பிடித்தான். பின் இராமன் படையெடுத்து சென்று இராவணனை அழித்து சீதையை மீட்டான் என்பது இராமாயணம்.

இராமாயணத்தில் வாழ்ந்த அதே மந்தரை துாபாபர யுகத்தில் கண்ணன் தோன்றிய மதுராவில் வாழ்ந்து வந்தாள். கண்ணனும், பலராமனும் கம்சனை அழிக்க மதுரா வந்த போது அந்நகரில் கண்ணன் மந்தரையைக் கண்டான். அவள் தன்கையில் சந்தனத்தோடு நின்றிருந்தாள்.

கண்ணன் மந்தரை என்று அழைத்தான். மந்தரையும் கண்ணன் அருகில் வந்தாள். பின்னர் தான் கம்சனுக்கு சந்தனம் பூசும் பணி செய்து வருவதாகவும் அதே போல் தான் கண்ணனுக்கும் சந்தனம் பூச விரும்புவதாகவும் கூறினாள்.

கண்ணனும் அவள் விருப்பத்தை ஏற்றான். அவள் குறும்பு பார்வையோடு கண்ணனை நோக்கி வந்தாள். அதே கூன் முதுகோடு கண்ணனுக்கு சந்தனம் எடுத்துப் பூசினாள். பிறகு கண்ணன் அவளை அருகே அழைத்து "எங்கே சிறிது நிமிர்ந்து நில்" என்று கூறினான். அவளும் கண்ணனின் உதவியோடு நிமிர்ந்து நின்றாள். என்ன வியப்பு அவள் கூன் நன்றாகி விட்டது. அவளுடைய வஞ்சகக் குறும்பும் அகன்று இளமையுடன் அழகானவளாய் மாறிவிட்டாள்.

பா.திசான்
யாழ். இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்னும் நாடகத்தில், விதி மற்றும் வாய்ப்புகள் ஆகியன இரண்டுமே அடங்கியுள்ளது
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரசுராமர் இட்ட சாபமும் கண்ணன் கேட்ட தானமும்

ஒரு நாட்டில் அனைவரும் கவசனத்துடன் நிற்கும்போது ஒருவர் மட்டும் முழு ஆடை அணிந்திருப்பாராயின், அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பது அங்குள்ளவர்களின் கணிப்பாகும்.

ஆம், நாடு முழுவதும் ஊழல் மோசடிக்குள் சிக்குண்டிருக்கும்போது, ஊழலை இல்லாதொழித்து நாட்டை நல்வழிப்படுத்துவதென்பது சாதாரணமானவிடய மல்ல.

தவிர, அவ்வாறு ஊழலை ஒழிக்கப் புறப்பட்டவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருப்பர்.

கூடவே மிகப்பெரும் சக்திமிக்க திமிங்கிலங்களுடன் போராட வேண்டிய தேவையும் ஏற்படும்.

இதை நாம் கூறும்போது, இவை மட்டும் தானா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இல்லை. ஊழல் பெருஞ்சாளிகள் தமக்கு எதிரானவர்களைத் தீர்த்துக் கட்டவும் தயங்க மாட்டார்கள்.

கூடவே அத்தகையவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப ஒன்றுசேர்ந்து தங்கள் பலத்தை நிரூபித்து விடவும் செய்வர்.

இதை நாம் கூறுவதற்குக் காரணம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஊழலை ஒழித்துக் கட்டுவதற்குத் திடசங்கற்பம் பூண்டாலும் அதனை வெற்றி கொள்வதென்பது சாதாரணவிடயமல்ல.

ஒரு மாதிரியாக ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெற்றுவிட்டார்.

இனிப் பாராளுமன்றத் தேர்தலில் அவர் சாதனை படைக்கும்போதுதான் அவர் தனது இலக்கை நோக்கிப் பயணிக்க முடியும்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் ஒரே மாதிரியானவை அல்ல.

பொதுத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட செல்வாக்குத் தனித்துவம் பெறும்.

தவிர, அநுர குமார திஸாநாயக்கவை எதிர்க்க வேண்டும் என்பதில் கங்கணம் கட்டி நிற்கக்கூடிய தென்பகுதி அரசியல் கட்சிகள், ஒன்றுசேர்ந்து பொதுத் தேர்தலைக் கையாளுகின்ற இராஜதந்திரோபாயங்களையும் பின்பற்றுவர்.

நிலைமை இதுவாக இருக்கும்போது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பயணம் செய்கின்ற அரசியல் பாதை கல்லும் முள்ளும் நிறைந்ததாகவே இருக்கும்.

இதற்கும் மேலாக; ஜனாதிபதி அநுரவின் குடும்பப் பின்னணி மற்றும் அரசியல் பின்னணி, அண்டை நாடுகளின் ஆதரவு என ஏகப்பட்ட தடைகளைத் தாண்டுவதிலேயே அவரின் அரசியல் வெற்றி தங்கியுள்ளது.

ஆம், மிக உத்தமனான கர்ணனுக்கு சாபம் இட்டவர் பரசுராமர். கர்ணன் மீது கணை தொடுத்தவன் தம்பி அர்ச்சுனன்.

அந்தக் கர்ணன் போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கையில், அவனைக் காப்பாற்ற வேண்டிய கண்ணபரமாத்மா அவனின் புண்ணியத்தை தானமாகப் பெற்று அவனின் உயிரை போகவைத்தான் எனில், இதுதான் உலகம் என்பதை உணர்ந்து கொள்வது அவசிய மாகிறது.

# வடக்கில் காணி தொடர்பான பிணக்குகளை தீர்ப்பதற்கு விசேட ஆணைக்குழு உருவாக்கம்

வடக்கில் காணித் தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு விசேட ஆணைக்குழு உருவாக்கத் தீர் மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண காணிப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் ஆளுநரின் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண காணி ஆணையாளர் மற்றும் மாகாணத்தில் உள்ள சகல மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் ஆளுநர் கருத்து தெரிவிக்கையில்,

ஏழை மக்களுக்கு உரிய காணிகள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். காணி வழங்குவதில் இடம்பெறும் முறைகேடுகள் அநீதிகள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்குரிய பொறுப்பு அலுவலர்கள் தொடர்ந்தும் தவறு செய்யும் பட்சத்தில் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

சில மாவட்டங்களில் மட்டுமே காணி அலுவலர்கள் சிறந்த முறையில் பணியாற்றுகின்றனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் காணி தொடர்பான பிரச்சினைகள் அதிகமாக உள்ளதால் அங்கு விசேட கவனம் எடுக்க வேண்டும்.

காணிதொடர்பானபிணக்குகளைத் தீர்ப்பதற்கு விசேட ஆணைக்குழு உருவாக்க வேண்டும்.

பொதுமக்களுக்கு எவ்வளவு தூரம் நாங்கள் உதவி செய்யலாம் என்ற நோக்கத்தோடு அரச உத்தியோகத்தர்கள் சேவையாற்ற வேண்டும். மிக விரைவாகவும் அன்பானதாகவும் தரமானதாகவும் சேவைகளை வழங்குதல் வேண்டும்.

அவ்வாறு வழங்க முடியாத பட்சத்தில் குறித்த காரணத்தை தெளிவாக தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு தெரியப்படுத்தாமல் மக்களை மீண்டும் மீண்டும் அலுவலகங்களுக்கு வரவழைக்கக் கூடாது. சில அலுவலர்கள் நடைமுறைப்படுத்தக் கூடிய விடயங்களை செய்யாமலும் நடைமுறைப்படுத்தக்கூடாத விடயங்களை செய்கின்றனர்.

அவ்வாறானவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றது. அவர்களுக்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச அலுவலர்கள் சரியானவர்களைத் தேர்வு செய்து காணிகளை வழங்காமை மக்களுக்கு செய்கின்ற துரோகம் என மேலும் தெரிவித்தார்.

அதே வேளை பொது மக்கள் சிறிய சிறிய பிரச்சினைகளுக்காக வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் உள்ள அலுவலகத்திற்கு வருகின்றனர், அவ்வாறான பிரச்சினைகளைத் தமது பிரதேசத்தில்உள்ளஉரிய அலுவலகங்களுக்குச்சென்றுசேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (ம-7,33)

## தன்னாட்சி-தற்சார்பு-தன்னிறைவு ஆகியவற்றை முன்னிறுத்தி போட்டி

**சி.வி.விக்னேஸ்வரன்**

(கொழும்பு)

தன்னாட்சி - தற்சார்பு - தன்னிறைவு ஆகிய மூன்று அடிப்படை விடயங்களை முன்வைத்தே தேர்தலில் போட்டியிடவுள்ளோம் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் இல்லத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எங்களுடைய கூட்டணி இளைஞர்களையும், அனுபவமுள்ளவர்களையும் வேட்பாளராக நியமித்துள்ளோம். நான் முன்பே கூறியது போன்று' தேர்தல் அரசியலில் இருந்து விலகியுள்ளேன்.

எமது வேட்பாளர்களின் சராசரி வயது 42 ஆகும். இளம் வேட்பாளர்கள் என இவர்களை சொல்லலாமா? என சிலர் கேட்டார்கள். எங்களுடைய அரச அலுவலர்கள் 60 வயது வரை வேலை செய்கின்றனர். எனவே 60 வயதுக்குட்பட்டவர்களும் இளையோர்தான்.

2018ஆம் ஆண்டு தொடங்கிய எமது கட்சியில் யாப்பில் தன்னாட்சி - தற்சார்பு - தன்னிறைவு ஆகியமூன்று அடிப்படைக்காரணங்களை முன்வைத்துள்ளோம். அதன் அடிப்படையில் தான் எமது கட்சி தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. இம்முறைத் தேர்தலிலும் அதனை முன்னிறுத்தியே போட்டியிடுவோம்.

எங்களின் கொள்கைகளை நாங்கள் எமது கட்சியின் யாப்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளோம். அதன் அடிப்படையில் செயற்படுகிறோம்.

புதிய அரசாங்கம் புதிய அரசியல் யாப்பை உருவாக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தமிழ் மக்கள் 300 வருடங்களுக்கு மேலாக வசித்து வருவதனால் எங்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கிறது. எமது சுயநிர்ணய உரிமைகளை புதிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், அவர்களுடன் இணைந்து செயற்பட நாம் தயாராக உள்ளோம் என மேலும் தெரிவித்தார்.(ம-7)

## வைத்தியர் அர்ச்சுனா பிணையில் விடுதலை

பிணை நிபந்தனைகளை மீறமாட்டேன் என மருத்துவர் அர்ச்சுனா உறுதி அளித்ததை அடுத்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றினால் மருத்துவர் அர்ச்சுனா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி வைத்தியசாலை முன்னாள் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் அர்ச்சுனா , தொலைபேசியில் சகவைத்தியர்களை அச்சுறுத்தியமை, சமூக ஊடகங்களில் அவதூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றங்களுக்கு எதிராக சாவகச்சேரி வைத்தியசாலையில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

குறித்த வழக்கில் வைத்தியர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த வழக்கு விசாரணையின் போது, பிணை நிபந்தனைகளை மீறியமை, ஆதாரங்களை சமர்ப்பிக்க தவறியமை [illegible] [illegible] பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அந்நிலையில் கடந்த வாரம் அர்ச்சுனாவின் சட்டத்தரணி நகர்த்தல் பத்திரம் மூலம் மன்றில் பிணை விண்ணப்பம் செய்திருந்த நிலையில் அதற்கான கட்டளை இன்றைய தினம் வியாழக்கிழமை வழங்கப்படும் என மன்று திகதியிட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று புதன்கிழமை மீண்டும் நகர்த்தல் பத்திரம் மூலம் மன்றில்பிணை விண்ணப்பம் செய்யப்பட்ட நிலையில், வைத்தியர் இனி வரும் காலங்களில் பிணை நிபந்தனைகளை மீற மாட்டார் என உறுதி அளிக்கப்பட்ட நிலையில் இரண்டு ஆள் பிணையில் செல்ல மன்று அனுமதி அளித்தது.

அதே வேளை வைத்தியருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் இன்று வியாழக்கிழமை மன்றில் எடுத்துக்கொள்[illegible]ள்ளமை. குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## ஞானசாரருக்கு பிடியாணை

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பிடியாணை பிறப்பிக்குமாறு கோட்டை நீதவான் திருமதி தனுஜா லக்மாலி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள நிப்போன் ஹோட்டலில் தேசிய பலசேனா அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப் பில் குர்ஆனை அவமதித்த வழக்குத் தொடர்பான விசாரணையின் போது, அவர் திறந்த நீதிமன்றத்தில் ஆஜராகாததால் இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.(ம-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக்கடைகள், சந்தைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் -2025 (01.01.2025-31.12.2025)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,180.00 (வற் வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 10.10.2024- 28.10.2024 **(மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)**

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 29.10.2024 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 29.10.2024 .மு.ப 10.00 மணிக்கு

1.விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **29.10.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

3.கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதி அற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.

4.கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.

5.கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.

6.பண்ணைப்பகுதியில் அமைந்துள்ள இல 01 தொடக்கம் இல 10 வரையான இறைச்சிக்கடைகளுக்கு 2025 ஆம் ஆண்டு புனரமைப்பு செய்யவேண்டிய தேவை ஏற்படும் பட்சத்தில் மாநகரசபையால் அடையாளப்படுத்தும் மாற்று இடத்துக்கு இடமாற்றம் செய்யப்படும்.

7.குத்தகை தொடர்பான ஏனைய நிபந்தனைகளை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

பார்வையிடலாம்.

| இல | இறைச்சிக்கடை,கருவாடுக்கடை பல்பொருள் வாணிபக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 643,650.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 57,100.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 638,000.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 637,000.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 510,000.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 515,000.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 810,000.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 120,000.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,601,700.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 1,062,000.00 |
| 11 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 140,000.00 |
| 12 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 385,000.00 |
| 13 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 519,000.00 |
| 14 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 510,900.00 |
| 15 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 589,735.00 |
| 16 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 1,001,150.00 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 705,887.02 |
| 18 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 624,234.98 |
| 19 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 433,950.00 |
| 20 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,051,320.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,781,250.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 712,200.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 325,000.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 565,250.00 |
| 25 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.05 | 5,000.00 | 207,965.08 |
| 26 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 261,345.00 |
| 27 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.07 | 5,000.00 | 146,225.45 |
| 28 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.08 | 5,000.00 | 130,075.66 |
| 29 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.09 | 5,000.00 | 144,470.75 |
| 30 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 510,000.00 |
| 31 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 51,100.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 523,000.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,400.01 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 496,300.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 434,355.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,002.00 |
| 37 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,100.00 |
| 38 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 512,000.00 |
| 39 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | | 5,000.00 | 330,000.00 |
| 40 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10,000.00 | 2,255,000.00 |
| 41 | பண்ணை மீன் சந்தை | | 10,000.00 | 8,588,280.00 |
| 42 | குருநகர் மீன் சந்தை | | 10,000.00 | 9,001,001.00 |
| 43 | செங்குந்தா சந்தை | | 10,000.00 | 5,060,000.00 |
| 44 | நாவாந்துறை மீன்சந்தை | | 10,000.00 | 668,000.00 |
| 45 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 90,000.00 |
| 46 | பாசையூர் மீன்சந்தை | | 2,000.00 | 405,001.00 |
| 47 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் சந்தை | | 2,000.00 | 6,564.56 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 021 221 5978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமூகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர சபை ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-1364)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்...

ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

முன்னதாகவே சதொச மனித புதைகுழி அகழ்வுப் பணியை செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்குப் பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக குறித்த அகழ்வுப் பணி தொடர்பான உண்மையான விடயங்களை அறிக்கையிடவும் அகழ்வுச் செயற்பாடுகளை ஆவணப்படுத்தவும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஒன்லைன்...

காலப்பகுதியில் நிதி மோசடிகள் தொடர்பில் 340 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கணினி அவசரப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் வரை, இணையம் தொடர்பாக 7,210 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை சமூக ஊடகங்கள் மூலம் இடம்பெற்றவையாகும்.

ஒன்லைன் மோசடிகளால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகளில் 20 சதவீதம் ஒன்லைன் சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்புடையவையாகும்.

இவற்றில், ஒன்லைன் வங்கியில் ஈடுபடும் பயனர்களைக் குறிவைத்து இணைய மோசடிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு உள்ளது.

பெரும்பாலான நேரங்களில், ஒன்லைன் வங்கி பயனர்கள் OTP எண்ணின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துவதில்லை, இது வங்கிக் கணக்கை அணுகுவதற்குப் பயன்படுத்தப்படும் கடவுச்சொல் மற்றும் தற்காலிகக் கடவுச்சொல் ஆகும்.

கடந்த காலங்களில் ஒன்லைன் வங்கிச் சேவை தொடர்பான மோசடிகள் தொடர்பாக 340 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

வங்கிகள் தொடர்பான இணையத்தளத்தைச் சரியாக அடையாளம் காணாத பலர் இவ்வாறான மோசடியில் சிக்கியுள்ளதாகக் கணினி அவசரப் பிரிவின் பாதுகாப்புப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

## தமிழ் மக்கள்...

தமிழ் மக்கள் கூட்டணி சிரேஷ்ட உறுப்பினர்), மிதிலைச்செல்வி ஸ்ரீ பத்மநாதன் (தமிழரசுக் கட்சி கொழும்பு மாவட்ட கிளையின் முன்னாள் உப தலைவர் மற்றும் மகளிர் அணி உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழக பட்டதாரி), வரதராஜா பார்த்தீபன் (யாழ்.மாநகர சபை முன்னாள் உறுப்பினர் மற்றும் யாழ்.எயிட் தொண்டு நிறுவன சிரேஷ்ட தலைவர்), நாவலன் கோகிலவாணி (முன்னாள் போராளி, நிர்வாக இயக்குநர், தொழில்முனைஞர் மற்றும் மொழி பெயர்ப்பாளர்), அருள்பரன் உமாகரன் (சட்டத்தரணி, கவிஞர் மற்றும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்), பிரான்சிஸ் குலேந்திரன் செல்ரன் (யாழ்.மத்திய கல்லூரி கிரிக்கெட் தலைமைப் பயிற்சியாளர், யாழ்.பல்கலைக்கழக பட்டதாரி), முருகானந்தம் யசிந்தன் (பிராந்திய இயக்குநர், ஆர்.பி. கொ நிறுவனம்), கதிரேசன் சஜீதரன் (யாழ்.பல்கலைக்கழக பட்டதாரி, கோண்டாவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்) ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் கூட்டணியின் பதிவு செய்யப்பட்ட மான் சின்னத்தில் இவர்கள் போட்டியிடுகின்றனர். வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னர் வேட்பாளர்கள் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தினர்.

அரசியலில் இளையோருக்கு இடமளிக்கும் வகையில் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்றும் ஆனால் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து தங்கியிருந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவிருப்பதாகவும் கட்சித் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7,33)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## தமிழரசுக்...

தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஏற்கெனவே யாழ்.,கிளிநொச்சி தேர்தல் தொகுதிக்கான தேர்தல் நியமனங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நேற்று வன்னி மற்றும் அம்பாறை தேர்தல் மாவட்டங்களுக்கான பெயர்ப் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை மற்றும் மட்டக்களப்புத் தேர்தல் மாவட்டத்திற்கான நியமனப்பட்டியல் இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏனைய கட்சிகளோடு சேர்ந்து தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்தில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திற்கான வேட்புமனு இன்று தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார். (ம-7,316)

## 21 இந்திய...

அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த 21 இந்திய மீனவர்களும் இன்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ம-7)

## வாக்கெடுப்பின்றி...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது அமர்வில் இந்த வரைவு நேற்று நிறைவேறியுள்ளது.

குறித்த வரைவை சம்பந்தப்பட்ட நாடு என்ற வகையில் இலங்கை எதிர்க்கும் என நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் அறிவித்திருந்தார்.

இதனடிப்படையில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது, இலங்கை அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அமையும் நிலையான அரசாங்கத்தின் ஊடாக மனித உரிமையை நிலைநாட்டும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

எந்தவொரு இறையாண்மை அரசும் அதன் அரசியலமைப்புக்கு முரணாக இயங்கும் மற்றும் அதன் உள்நாட்டு சட்ட செயன்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் வெளிப்புறப் பொறிமுறையின் மேலெழுதலை ஏற்காது.

இந்தப் பொறி முறையின் பாதீட்டுத் தாக்கங்கள் குறித்துப் பல நாடுகள் ஏற்கெனவே அதிருப்தி வெளியிட்டுள்ளன.

எனவே 51/1 பரிந்துரையின் நிரப்பந்தத்தை நீடிக்கக் கோரி நேற்று சபையில் முன்வைக்கப்பட்டுள்ள வரைவு பரிந்துரையை நிராகரிக்கத் தாம் கடமைப்பட்டுள்ளதாகவும் இலங்கை சார்பில் அமர்வில் பங்கேற்ற ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணாதிலக்க சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.10.09
சீட்டிழுப்பு இலக்கம் 5620
W 3 4 8 1 6 0
அத சம்பத W 8 1 6 0
சீட்டிழுப்பு இலக்கம் 195

தன நிதானய
திகதி - 2024.10.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1650
U 21 55 57 78 U
69002

மெகா பவர்
திகதி 09/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1968
F 07 15 42 75 80
30333

லக்கி 7 VIP
திகதி 2024.10.09
சீட்டிழுப்பு இலக்கம் 0446
N 1 7 8 2 5 2 N

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3862
சீட்டிழுப்பு திகதி 09.10.2024
W 18 53 58 79
W 17359

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.09
சீட்டிழுப்பு இலக்கம் 929
மேஷம் 07 32 37 53 மேஷம்
82624 22

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.10.2024 வெற்றி வாரம் 328 வர்ணம் பச்சை
ஆங்கில எழுத்து L
மற்றும் வெற்றி இலக்கம் 2 0 9 3 1 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,473,852.00
64076
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2594 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 09.10.2024 தினம் புதன்கிழமை
07 52 59 66 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,123,382.40

சனிதா
திகதி 2024.10.09 வெற்றி வாரம் 4755
13 24 43 50 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,521,518.40
40921
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4306 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.10.09 தினம் புதன்கிழமை
03 06 11 41 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,538,813.60
219851

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 10 19 45 56 71
1770
09.10.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 549,489,291.80
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2024.10.09 வெற்றி வாரம் 2067 வர்ணம் மஞ்சள்
29 49 55 60 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,745,542.00
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI
புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,151,184.80
சீட்டிழுப்பு திகதி : 2024.10.09
17 20 25 66 V
579721

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TECHNO WORLD

## A/L தொழில்நுட்பப்பிரிவு

### விசேட செயலமர்வு

15,16,17 October 2024 — தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

18,19 October 2024 — பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்

20,21 October 2024 — ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்

இடம்: வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

(C-1366)

தொடர்புகளுக்கு : 077 017 5346

# Vacancy

Company Name : International engineering service (pvt) ltd
Position : Draftsmen
Experience : Considerable experience in the building
Qualification : NVQ 5 and 6, and any experience in the building

(412)

Contact - 021 223 0916
send your cv:
info@ieslengineers.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (2263)

076 825 7716 (ஆகாஸ்)

# அகரம்

## உயர்நிலைக் கல்லூரி
## AHARAM HIGH STANDARD COLLEGE

காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

### புதிய கல்வி ஆண்டு -2024

புலமைப்பிரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

புதிய தரம் 06 தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்

12.10.2024 (சனிக்கிழமை)

விஜயதசமி நன்னாள் அன்று மாலை 3.02 - 4.32

அனுமதிகளை 09.10.2024 இருந்து பெற்றுக் கொள்ளலாம்

குறிப்பு :
ஆரம்பிக்கும் நாள் முதல் தைமாதம் வரை நடைபெறும் வகுப்புக்களிற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டா!

(2251)

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

# வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127

# யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (413)

## APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

# அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2026ல் நீங்களும் அமெரிக்காவில்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் — 0768226244

எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்

விண்ணப்ப முடிவு திகதி 05-11-2024

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | கிளிநொச்சி 0768226240 | யாழ்ப்பாணம் 0777068777 | கொடிகாமம் 0764550675 | சாவகச்சேரி 0768226242 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | பண்டத்தரிப்பு 0777718322 | சங்கானை 0777726322 | கோப்பாய் 0764550674 | புத்தூர் 0764550671 | நாச்சிமார் கோவிலடி 0777720322 |
| நெல்லியடி 0776699692 | V2 Travels | | வேலணை 0743900353 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697950 |

# வீடு விற்பனைக்கு

யாழ். வேம்படி வீதியில் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : (2264)

077 710 9016

# காணி வாடகைக்கு தேவை

யாழ். புற நகர் பகுதிகளில் நிறுவனம் ஒன்றுக்கு 2 பரப்பு அல்லது அதற்கு மேற்பட்ட இடமொன்று வாடகைக்கு வேண்டும். (கட்டடம் இருத்தல் விரும்பத்தக்கது.) (2265)

077 919 1529


# மணிவிழா வாழ்த்துக்கள்

ஆசிரிய சேவையில் முப்பத்து நான்கு வருடங்கள் சேவையாற்றி 10.10.2024 இன்று மணிவிழாக் காணும் எனது ஆசிரியரை வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.



## திருமதி நிர்மலாதேவி அருமைநாதன்

(SLTS - I, குருபிரதீபா பிரபா - 2015)

### சேவைவிபரம்

- 27.03.1990 - 31.01.1999
  யா/மல்லாகம் மகா வித்தியாலயம்
- 01.02.1999 -23.01.2006
  யா/இராமநாதன் கல்லூரி, யா/ இணுவில் இந்துக் கல்லூரி
- 24.01.2006 - 23.05.2011
  யா/இராமநாதன் கல்லூரி
- 24.05.2011 - 01.08.2013
  யா/இராமநாதன் கல்லூரி, யா/ குளமங்கால் றோ.க.வித்தியாலயம்
- 02.08.2013 - 11.03.2019
  யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம், யா/ குளமங்கால் றோ.க. வித்தியாலயம்
- 12.03.2019 - 09.10.2024
  யா/ குளமங்கால் றோ.க.வித்தியாலயம்

அருமையான ஆசிரியரே
தாயாய் தந்தையாய்
ஆசானாய் மந்திரியாய்
நற்குருவாய் இருந்தென்னை
ஆற்றுவித்த ஆசிரியை

கடமை கண்ணியம் கட்டுப்பாடு
இவற்றுடன் நேர்மை, நீதி, நியாயம்
தன்பாற் கொண்டவர் – எங்கள்
அருமைநாதன்(நிர்மலா) ஆசிரியர்

எந்நாளும் இந்நாள் போல
பல்கலைக் குடும்பமாக
சீரும் சிறப்போடும் – எந்தன்
உள்ளம் உவகை பொங்க
சீர் பெற்று வளமோடு
வாழ்த்திடுவோம்.

வாழ்த்துபவர் : முன்னைநாள் மாணவி
திருமதி.றஜிவ்குமார் காயத்திரி

(2217)


# CANADA VISA

வெற்றிகரமான 13 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்க இருக்கும் winstar visa Consultants இன் அதிரடி சலுகை

## 90% கட்டணக்கழிவு

- கனடா விசாக்கள் 13 பேருக்கு மட்டும். மொத்தக் கட்டணத்தில் 90% கட்டணக்கழிவு.
- 13 நாட்களுக்குள் விண்ணப்பித்துத் தரப்படும்.
- Sponsor அழைப்புக் கடிதம் எம்மால் ஒழுங்கு செய்யப்படும்.
- முதல் முறையாக விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டும்.
- சட்டத்தரணிகள் மூலம் ஒப்பந்தம்.
- குடும்பமாகவும் செல்லலாம்.

(414)

இச் சலுகை 13.10.2024 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளும் 13 பேருக்கு மட்டுமே



CANADA

இன்றே இவ்வரிய சந்தர்ப்பத்தினை தவற விடாமல், முற்பதிவு செய்து நேரில் வரவும்.

90%

Winstar Consultants Pvt Ltd
45, Vembadi Street, Jaffna.
071 071 6979


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.